சியபத பினான்ஸ்
Siyapatha Finance
(Finance company of Sampath Bank Group)

**முக்கிய உள்ளடக்கங்கள் பற்றிய ஆவணம் (KEY FACTS DOCUMENT)**

சியபத பினான்ஸ் பிஎல்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் உற்பத்திகள் ∴ சேவைகள் தொடர்பான முக்கிய விடயங்கள் இந்த ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு விடயத்தையும், நிறுவனத்தின் தேவைகளுக்கு ஏற்ற வகையில் மாற்றவோ, நீக்கவோ அல்லது சேர்க்கவோ, நிறுவனம் முழுமையான அதிகாரத்தைக் கொண்டுள்ளது. இந்த ஆவணம், இலங்கை மத்திய வங்கியின் 2018 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்க வரையறைகளுக்கு அமைய, வாடிக்கையாளர்களைப் பாதுகாக்கும் கட்டமைப்புக்கு உட்பட்ட வகையில் தயாரிக்கப்பட்டு விநியோகத்திற்காக வழங்கப்படுகிறது.

## 1. உற்பத்திகள் மற்றும் சேவைகள் (Products and services)

| உற்பத்தி ∴ சேவை | விபரம் |
|---|---|
| லீஸிங் (குத்தகை) | தகுதி பெறும் தனிப்பட்ட, சிறிய மற்றும் நடுத்தர குழும வாடிக்கையாளர்களுக்கு, தனிப்பட்ட அல்லது வர்த்தகப் பாவனைகளுக்காக நிதிசார் குத்தகை வசதிகள் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன. இந்த உற்பத்தியின் கீழ், பிரதானமாக வாகனங்கள் குத்தகைக்கு வழங்கப்படுவதோடு, குறிப்பிட்ட சில இயந்திர உபகரணங்கள், கருவிகள் என்பனவும் நிதிசார் குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன. |
| கடன்கள் | வாடிக்கையாளர்களின் தனிப்பட்ட மற்றும் வர்த்தகத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், நிதித் தீர்வுகளாக கடன்கள் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன. அவ்வப்போது ஏற்படும் தேவைகளான கல்வி, சுகாதாரம், திருமணம் போன்ற திடீர் தேவைகளுக்காக தனிப்பட்ட கடன்களும், மூலதனத் தேவைப்பாடுகள், செயற்பாட்டு மூலதனத் தேவைப்பாடுகள் ஆகிய சிறிய மற்றும் நடுத்தர வர்த்தக நிறுவனங்கள் மற்றும் குழும நிறுவனங்களின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யும் நோக்கில் பிரதானமாக வர்த்தகக் கடன்களும் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன. |
| பெக்டரிங் | வர்த்தக நிறுவனங்களின் சிறிய மற்றும் நடுத்தர செயற்பாட்டு மூலதனத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக பெக்டரிங் வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. இதனடிப்படையில், இன்வொய்ஸ் பெக்டரிங் (ஐளெழஉைந கயஉவழசலைப), கடனாளிகளின் காசோலைகளைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கை, கடனாளிகளின் காசோலைகள் மற்றும் சுழற்சிக் கடன் வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல் ஆகிய பல்வேறு உற்பத்திகள் பெற்றுக் கொடுக்கப்படுவதோடு, சிறிய மற்றும் நடுத்தர வர்த்தக நிறுவனங்களுக்கும், குழும வர்த்தக நிறுவனங்களுக்கும் ஏற்படும் மூலதனத் தேவைப்பாடுகளின் அடிப்படையைக் கருத்திற் கொண்டு இந்த உற்பத்திகள் வெவ்வேறு தேவைகளுக்காக வழங்கப்படுகின்றன. |
| பொற்கடன் (தங்க நகைக் கடன்) | பொற்கடன் பிரிவில் தங்கம் மற்றும் தங்க ஆபரணங்களை பிணையாக வைத்து கடன் வசதிகள் வழங்கப்படுகின்றன. இது, அதிகபட்சம் 12 |

| | |
|---|---|
| | மாதங்களுக்கு செல்லுபடியாகும். இந்த அடிப்படையில் தங்க ஆபணரங்கள் நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் வைத்திருக்கப்படும். கடன் தொகை, வட்டியுடன் முழுமையாகச் செலுத்தப்பட்டதும், ஆபரணங்கள் மீள வழங்கப்படும். |
| வைப்புகள் | வாடிக்கையாளர், வட்டி வருமானம் ஒன்றைப் பெறும் நோக்கில், குறிப்பிட்ட ஒரு காலப்பகுதிக்கு தமது பணத்தை நிறுவனத்தில் வைப்புச் செய்து, அதற்காக வங்கியில் பணத்தை கையளிக்கும் செயற்பாடு வைப்பு எனக் கருதப்படுகின்றது. அத்துடன், பணத்திற்குப் பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ளும் தேவைப்பாட்டையும் வாடிக்கையாளர்கள் நிறுவனத்திடம் எதிர்பார்க்கின்றனர். பிரதானமாக, இரண்டு வகையான வைப்புகள் காணப்படுகின்றன. அவையாவன - சேமிப்புக் கணக்கு மற்றும் நிலையான வைப்பு என்பனவாகும். வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கு ஏற்ப இவை பெற்றுக் கொடுக்கப்படும். |

## 2. வட்டி வீதங்கள் (Interest rates)

| உற்பத்தி ∴ சேவை | வட்டி வீதங்கள் |
|---|---|
| லீஸிங் (குத்தகை) | 11.5% - 32% வருட |
| கடன்கள் | 16% - 24% வருட |
| பெக்டரிங் | 14% -15% வருட |
| பொற்கடன் (தங்க நகைக் கடன்) | 12% - 17% வருட |
| வைப்புகள் | வாடிக்கையாளர்களின் வசதி கருதி, கிளை நிலையங்களிலும், எமது www.siyapatha.lk என்ற இணைய தளத்திலும் வைப்பு உற்பத்திகளுக்கான வட்டி வீதங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. |

- கடன் வசதிகளின் வகை, காலப்பகுதி மற்றும் அதற்காக பெற்றுக் கொடுக்கப்படும் பிணை என்பனவற்றைப் பொறுத்து வட்டி வீதங்கள் தீர்மானிக்கப்படும். சந்தை நிலைமைகளைக் கருத்திற் கொண்டு எமது வட்டி வீதங்கள் காலத்திற்குக் காலம் மாற்றமடையலாம்.

## 3. ஏனைய கட்டணங்கள், தரகுகள் மற்றும் செலுத்த வேண்டியவை (Other charges, Fees & Commissions)

- செயற்பாட்டுக் கட்டணம் மற்றும் காப்புறுதிக் கொடுப்பனவுகள், அரசாங்க வரிகள் (இருப்பின்), பெறுமதி மதிப்பீட்டுக் கட்டணம் (இருப்பின்) ஆகியன கடன் பெறுவோரால் செலுத்தப்பட வேண்டும். கடன் தொடர்பான கலந்துரையாடல் இடம்பெறும் காலப்பகுதியில் நிறுவனம் இவை தொடர்பான விபரங்களை உரிய நபருக்குத் தெரிவிக்கும். கடன் வழங்கல் தொடர்பான கடிதத்தில் இந்த விபரங்கள் யாவும் முழுமையாக குறிப்பிடப்பட்டிருக்கும்.

- கடன் வசதி வழங்கப்பட்ட காலப்பகுதியின் பின்னர் ஏற்படும் செலவுகள் ஏதேனும் இருப்பின், நிறுவனம் அவற்றை மாதாந்த அடிப்படையில் பிரித்து செலுத்த வேண்டிய தொகையுடன் சேர்த்து அறவிடும். இறுதிக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் போது அவ்வாறு அதிகரிக்கப்பட்ட தொகை அல்லது செலவினங்களும் அதில் உள்ளடக்கப்பட்டிருக்கும்.
- வைப்பு ஒன்றைச் செய்துள்ள நபர், ஏதேனும் கடன் வசதி ஒன்றை அல்லது உத்தரவாத வசதி ஒன்றை அந்த வைப்புக்கு எதிராகப் பெற்றுக்கொள்ள விரும்பினால், குறித்த வசதிக்காக பெற்றுக்கொள்ளப்படும் வட்டி வீதம் மற்றும் கட்டணங்கள் தொடர்பான விபரங்கள் இங்கு தெரிவிக்கப்பட்ட கடன் வசதிக்காக அனுமதி பெற்றுக் கொடுக்கப்படும் போது குறித்த வைப்பாளருக்கு தெரிவிக்கப்படும்.

## 4. வைப்புகள் (Deposits)

- சேமிப்புக் கணக்கை ஆரம்பிக்க ரூபா 1,000.∴- வும், நிலையான வைப்பு ஒன்றை ஆரம்பிக்க ரூபா 10,000.∴- வும் குறைந்தபட்சத் தேவைப்பாடுகளாகும்.
- கணக்குகளைப் பராமரிப்பதற்கு அல்லது அவற்றை மூடுவதற்கு எவ்வித கட்டணங்களும் வசூலிக்கப்பட மாட்டாது. இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்திற்கு அமைய, வைப்பாளர் ஒவ்வொருவருக்கும் அதிகபட்சம் ரூபா 1,100,000.∴- வரை காப்புறுதித் திட்டத்தின் கீழ் பெற்றுக் கொடுக்கப்படும்.
- சேமிப்புக் கணக்கு உரிமையாளர் ஒருவர், தொடர்ந்து 12 மாதங்களுக்கு நிறுவனத்துடன் கொடுக்கல் வாங்கல் செய்யாத பட்சத்தில், குறித்த கணக்கு செலிழந்த கணக்காகக் கருதப்படும்.
- வாடிக்கையாளர் ஒருவர் நிறுவனத்துடன் 10 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் கொடுக்கல் வாங்கல் மேற்கொளாத பட்சத்தில், அவரது சகல வைப்புகளும் இலங்கை மத்திய வங்கியின் சட்டதிட்டங்களுக்கு அமைய மத்திய வங்கிக்கு பரிமாற்றம் செய்யப்படும்.
- ஏனைய சகல நியதிகள் மற்றும் நிபந்தனைகளும் வைப்புக் கணக்கு விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 5. உற்பத்திகளைப் பெற்றுக்கொள்ளும் முறை (Product obtaining procedure)

### (அ) குத்தகை / கடன் / பெக்டரிங் (Leases / Loans / Factoring )

- கடன் வசதி தேவைப்படுபவர், நிறுவனத்தின் பிரதிநிதி ஒருவரைச் சந்தித்து அது சம்பந்தமான தேவைப்பாடுகள் பற்றி அறிந்து கொள்ள வேண்டும்.
- இவ்வாறு தெரிந்து கொண்ட பின்னர், நிறுவனத்தின் பிரதிநிதியும், வாடிக்கையாளரும் கடன் வசதி தொடர்பான நியதிகள் மற்றும் நிபந்தனைகள் பற்றிக் கலந்துரையாடுவார்கள்.
- கடன் கோருபவர், கடன் விண்ணபத்தை முழுமையாகப் பூர்த்தி செய்து, தேவையான ஆவணங்களுடன் நிறுவனத்தின் பிரதிநிதியிடம் சமர்ப்பிப்பார். முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் கிடைக்கப் பெற்றதும், நிறுவனம், குறித்த வாடிக்கையாளருக்கு

குறிப்பிடப்பட்ட சேவை அல்லது உற்பத்தியைப் பெற்றுக்கொடுக்க முடியுமா என்பது தொடர்பாக மதிப்பீடு ஒன்றை மேற்கொள்ளும்.

- அங்கீகாரம் வழங்கப்படும் நடவடிக்கைக் காலப்பகுதியில், வாடிக்கையாளர் ∴ பிணையாளிகளை மேலதிக விபரங்களுக்காக நிறுவனம் தொடர்புகொள்ளும். அத்துடன், வழங்கப்பட்டுள்ள ஆவணங்கள் மற்றும் தகவல்கள் பற்றி அறிந்ததும் கடன் மதிப்பீடு மேற்கொள்ளப்படும்.
- முதலில் கலந்துரையாடப்பட்ட கொடுக்கல் வாங்கல், நியதிகள் மற்றும் நிபந்தனைகள் என்பன அங்கீகாரக் காலப்பகுதியின் போது மாற்றமடையக் கூடும். இவை தொடர்பான இறுதித் தீர்மானத்தின் முன் நிறுவனம் வாடிக்கையாளருக்கு அறிவிக்கும்.
- நிறுவனத்தினால் கடன் வசதி அங்கீகரிக்கப்பட்டதும், தேவையான சட்ட ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு, அவை பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் கடன் வசதியைப் பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.
- ஒரு கடன் வசதியை அங்கீகரிப்பதும், நிராகரிப்பதும் தொடர்பான முழுமையான உரிமையை நிறுவனம் கொண்டுள்ளது.

**(ஆ) பொற்கடன் (Gold Financing)**

- கடன் வசதி பெற விரும்பும் வாடிக்கையாளர் கிளை ஒன்றுக்குச் சென்று பொற்கடன் வசதி பற்றிக் கோரிக்கை செய்வார்.
- கிளையிலுள்ள நிறுவனத்தின் பிரதிநிதி குறித்த கோரிக்கையை மதிப்பீடு செய்து அடகு கொடுக்கல் வாங்கலுக்கு பொருத்தமாக உள்ளனவா எனப் பரிசோதிப்பார்.
- நிறுவனத்தின் பிரதிநிதி, வாடிக்கையாளரின் தங்கம் ∴ தங்க ஆபணரங்களை மதிப்பீடு செய்து, அவற்றின் பெறுமதியை வாடிக்கையாளருக்கு விளக்கிக் கூறி அவற்றின் பெறுமதிக்கு ஏற்ப, நிறுவனத்தின் கட்டுப்பாடுகளுக்கு அமைய எவ்வளவு தொகை வழங்கப்படலாம் என்பது பற்றி வாடிக்கையாளருக்கு கூறுவார்.
- வாடிக்கையாளர் குறித்த தொகையுடன் இணங்கும் பட்சத்தில் தங்க நகை கடன் வசதி பெற்றுக் கொடுக்கப்படும்.

**(இ) வைப்புகள் (Deposits)**

- வைப்பு செய்ய எதிர்பார்க்கும் நபர் நிறுவனத்தின் கிளை ஒன்றுக்குச் சென்று நிறுவனத்தின் பிரதிநிதி ஒருவரைச் சந்தித்து வைப்பு தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வார்.
- வாடிக்கையாளரால் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் மற்றும் அவரது ஏனைய விபரங்கள் உட்பட அது தொடர்பான சகல ஆவணங்களையும் பெற்றுக்கொண்ட பின்னர் கணக்கு ஒன்று ஆரம்பிக்கப்படும்.
- ஆவணங்கள் யாவும் சரிபார்க்கப்பட்டு, உறுதிப்படுத்தப்பட்ட பின்னர், வாடிக்கையாளருக்கு நிலையான வைப்புச் சான்றிதழ் அல்லது சேமிப்புக் கணக்கு பாஸ் புத்தகம் ஒன்று வழங்கப்படும்.

**6. குத்தகை ∴ கடன் ∴ பெக்டரிங் மற்றும் பொற்கடன் வசதிகளுக்கான பிரதான நியதிகளும் நிபந்தனைகளும் (Main terms and conditions for Leases/Loans/Factoring/Gold Financing)**

- பிரதான நியதிகள் மற்றும் நிபந்தனைகளான வட்டி வீதம், தரகு வீதம், கட்டணங்கள், கடன் தொகை, சலுகைக் காலம், மீளச் செலுத்தப்படும் காலப்பகுதி, பிணையாக வைக்கப்படும் ஆதனம் மற்றும் ஏனைய விசேட நியதிகள் மற்றும் நிபந்தனைகள் ஆகிய அனைத்தும் ஒவ்வொரு கடன் வசதியைப் பொறுத்தும் வேறுபடும். ஒப்பந்தத்தில் இறுதி கையொப்பம் பெறுவதற்கு முன்னர் கடன் வசதி பெற்றுக்கொடுக்கப்படும் கடிதத்தின் ஊடாக வாடிக்கையாளருக்கு இவை பற்றிய சகல விபரங்களும் தெரிவிக்கப்படும்.

**7. செல்லுபடியாகும் சட்ட தேவைப்பாடுகள் (Applicable legal provisions)**

- ஒவ்வொரு உற்பத்தியும், இலங்கையில் அமுலிலுள்ள 2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க நிதி குத்தகை சட்டம், 1949 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க பிணை சட்டம், சிவில் செயற்பாட்டுக் கட்டுப்பாடுகள் மற்றும் இலங்கையின் ஏனைய அனைத்து சட்ட திட்டங்களுக்கு அமைவாக மேற்கொள்ளப்படும்.

**8. வெளிப்படுத்தல்கள் (Disclosure)**

- 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதி வர்த்தக சட்டத்தின் 61 ஆம் பிரிவுக்கு அமைய நிறுவனமானது, வாடிக்கையாளர்களின் கொடுக்கல் வாங்கல்கள் பற்றி தீவிர பாதுகாப்பு மற்றும் இரகசியத்தன்மையைப் பேண உறுதிப்படுத்துகிறது.

**9. 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நிதிக் கொடுக்கல் வாங்கல்களை தெரியப்படுத்தும் சட்டம் (Financial Transaction Reporting Act No. 06 of 2006)**

- 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நிதிக் கொடுக்கல் வாங்கல்களை அறிவிக்கும் சட்டத்தின் 7ஆம் பிரிவுக்கு அமைய, நிறுவனத்திற்கு ஏதேனும் சந்தேகம் எற்படும் வகையிலான கொடுக்கல் வாங்கல் ஒன்று மேற்கொள்ளப்பட்டால் அல்லது அதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டால், குறித்த கொடுக்கல் வாங்கல்களில் ஏதேனும் சட்டவிரோத தன்மை காணப்படுகிறது என்ற அல்லது குற்றச்செயல் ஈடுபாடு காணப்படுகிறது என்ற சந்தேகம் ஏற்படும் பட்சத்தில் இது தொடர்பாக நிதி புலனாய்வு பிரிவுக்கு தெரிவிக்க நிறுவனம் இணங்குகிறது.

**10. முறைப்பாடுகள் தொடர்பான நடவடிக்கைகள் (Complaint handling procedure)**

- எந்தவொரு கிளையிலும் காண்பிக்கப்பட்டுள்ள விசேட அழைப்பு இலக்கத்தின் மூலம் பிரதான அலுவலகத்தில் இருந்து செயற்படும் முறைப்பாடுகள் தொடர்பான அதிகாரியுடன் தொடர்பு கொண்டு முறைப்பாடுகளை மேற்கொள்ள முடியும். இதற்கு மேலதிகமாக கிளைகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள நிதி ஆலாட்சி அதிகாரியைத் (ஓம்புட்ஸ்மன்) தொடர்பு கொண்டு அவரது உதவிகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

**<u>தொடர்பு விபரங்கள்</u>**

1. வாடிக்கையாளர் முறைப்பாடுகளைக் கையாளும் அதிகாரி
சியபத பினான்ஸ் பிஎல்சி
நவம் மாவத்தை,
கொழும்பு 02
மின்னஞ்சல்: customerrelations@siyapatha.lk
0117 605 605 / 0776 105105 (Ext : 1530/1640/1656)

2. நிதி குறைகேள் அதிகாரி
நிதி குறைகேள் அதிகாரி அலுவலகம்,
இல. 143யு, வஜிர றோட்,
கொழும்பு 05
மின்னஞ்சல்: fosril@sltnet.lk
0112 595 624